# விவசாய தொழில்நுட்பத் தகவல்

**விவசாய தொழில்நுட்ப தகவல்களை விரிவாக்க அலுவலர்களிற்கு மிக விரைவாக வழங்கும் ஒரு கையேடு.**

**விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு.**

**தொழில்நுட்ப பிரசுரம் இலக்கம் 22- 2020 ஆகஸ்ட்**




விவசாய இரசாயனங்களில் சமீபத்திய காலங்களில் அதிகம் பேசப்பட்டது கிளைபோசேட் எனும் களைநாசினி பற்றியாகும். இது இலங்கையில் மட்டுமல்லாது, உலக கவனத்தையும் ஈர்த்த ஒரு தயாரிப்பாகும். சிலருக்கு ஏற்பட்ட உடல் நல பாதிப்புக்கள் காரணமாக இந்த தயாரிப்பை உருவாக்கிய நிறுவனம் இழப்பீடு செலுத்த வேண்டியிருந்தது, கடந்த காலத்தில் இந்த தயாரிப்பு இலங்கையிலும் சுதந்திரமாகப் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும், பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த எதிர்ப்புக்கள் காரணமாக, இது ஒரு முறை இலங்கையில் பயன்படுத்த முற்றாக தடை விதிக்கப்பட்டு, பின்னர் ஒரு குறிப்பிட்ட அளவில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. எனவே, தற்போது கிளைபோசேட்டை தேயிலை மற்றும் றப்பர் போன்ற பெருந் தோட்ட பயிர்களில் களைக் கட்டுப்பாட்டுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். இதன் இறக்குமதியும், விநியோகமும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. நெல் உள்ளிட்ட குறுகிய கால விவசாய நிலங்களில் கிளைபோசேட் பயன்படுத்த தடை இன்னும் காணப்படுகின்றது.

விவசாயத்தில் கிளைபோசேட்டின் முக்கியத்துவத்தினை, மக்கள் மத்தியில் இது எந்தளவிற்கு பிரபல்யமடைந்துள்ளது என்பதிலிருந்து அறிய முடிவதோடு, தற்போது விவசாயிகள் இதனை சட்டவிரோத வழிமுறைகள் மூலம் பெறவோ அல்லது பயன்படுத்தவோ தூண்டப்படுகின்றனர். அதாவது, கிளைபோசேட்டினைத் தேடி கணிசமான மக்கள் இன்னும் தங்களிடம் வருவதாக பீடைநாசினி விற்பனையாளர்கள் கூறுகின்றனர். இந்த கோரிக்கையின் காரணமாக, அனுமதி வழங்கப்படாத கிளைபோசேட் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுவது தெரியவந்துள்ளது. இந்தியாவில் இருந்து கடல் வழியாக கடத்தப்படுவதாக நம்பப்படும் இந்த பொருள், மிகவும் வலுவான வலைப் பின்னல் மூலம் நாடு முழுவதும் விநியோகிக்கப்படுகிறது. சட்டத்தின் கீழ் சிக்குண்டு வழக்குத் தொடருவது போன்ற வரம்புகளுக்கு அப்பாற்பட்டு இது செயற்படுகின்றது. பீடைநாசினிகள் பதிவுக் காரியாலயத்தின் உதவி விவசாயப் பணிப்பாளர் லசந்த ரத்னவீர அவர்கள் இது தொடர்பாக கூறுகையில்,

**"நாங்கள் கடந்த ஆண்டு பல சோதனைகளை மேற்கொள்ள எங்கள் பலத்தையும், வளங்களையும் பயன்படுத்தினோம், மேலும் பதினொரு விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தோம், அவர்களுக்கு லட்சக் கணக்கில் அபராதம் விதிக்கப்பட்டது. இருப்பினும், அபராதம் செலுத்திய பின்னர், தொழிலதிபர்கள் தங்கள் வேலையை மீண்டும் தொடங்குகின்றனர். இதற்கு முக்கிய காரணம் விவசாயிகளிடம் காணப்படும் கேள்வியாகும்"**




கிளைபோசேட் இன்றி பயிரிடத் தேவையான தொழில்நுட்ப அறிவை விவசாயத் திணைக்களம் ஏற்கனவே வெளியிட்டுள்ளது. எனவே, விவசாயிகள் கிளைபோசேட்டுக்காக சந்தைக்குச் செல்லும் பழக்கத்தைக் கைவிட்டு இவ் அணுகுமுறையை மாற்ற வேண்டும். மக்களிடமிருந்து எந்தக் கேள்வியும் இல்லை எனில் வணிகர்கள் அனுமதிப் பெற்றாலும் இவற்றை இறக்குமதி செய்வதில் ஆர்வம் காட்ட மாட்டார்கள். இந்த காரணத்தினால் தான் விவசாயத் திணைக்களத்தின் பீடைநாசினி பதிவுக் காரியாலயம் இந் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக விவசாயிகளிடம் உதவியை எதிர்ப்பார்க்கின்றது. இந்த வழியில் கிளைபோசேட் நாட்டிற்குள் நுழைவது சட்டத்தை விட சூழலுக்கும் மக்களுக்கும் மிகவும் தீங்கு விளைவிக்கும் என விஞ்ஞான ரீதியான கருத்தை பொதுமக்கள் மிகவும் கவனமாக சிந்திக்க வேண்டும்.

கலவையை பரிசோதித்து, பதிவு செய்யப்பட்ட பயன்பாட்டிற்கு அனுமதி அளிப்பது பொதுவான நடைமுறையாக இருந்தாலும், இங்கு இவ்வாறு நடைபெறாததால் பாதுகாப்புத் தொடர்பாக கடுமையான ஆபத்து உள்ளது. மற்ற விடயம் என்னவென்றால், இந்த அங்கீகரிக்கப்படாத தயாரிப்புகளுக்கு முறையான விலைக் கட்டுப்பாடு இல்லை. இதில் எந்த கலவை, எந்தப் பதார்த்தம் உள்ளது என்பது யாருக்கும் தெரியாது. இத்தகைய தரமற்ற பொருட்களை சூழலுக்கு வெளியிடுவது பெரும் தீங்கு விளைவிக்கின்றது. மேலும், வணிகர்கள் அனுமதி வழங்கப்படாதப் பொருட்களுக்கு தன்னிச்சையான கட்டணங்களை வசூலிக்கிறார்கள். இதன் விளைவாக, விவசாயி தேவையற்ற உற்பத்தி செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இதனை ஈடு செய்ய வாடிக்கையாளர்களிடமிருந்து தங்கள் தயாரிப்புக்கு அதிக விலையைப் பெறலாம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இத்தகைய நடவடிக்கைகளை சட்டப்பூர்வமாக ஒழுங்குபடுத்துவதை விட, விவசாய சமூகம் முறையாக விழிப்புடன் இருப்பதோடு, அங்கீகரிக்கப்படாத தயாரிப்புக்களில் இருந்து விலகி இருப்பது நடைமுறையான தீர்வாக அமையும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பது ஒட்டுமொத்த சமுதாயத்தின் பொறுப்பாகும்.

**பிரதி** :- சனத் எம். பண்டார, உதவி விவசாயப் பணிப்பாளர், தேசிய விவசாயத் தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை

**தொழில்நுட்ப உதவி :-** லசந்த ரத்னவீர – உதவி விவசாயப் பணிப்பாளர், பீடைநாசினிப் பதிவுக் காரியாலயம், கெட்டம்பே

**தமிழாக்கமும், கணணி வடிவமைப்பும் :-** லிசோதா செல்வராஜ், தேசிய விவசாயத் தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை

**மேற்பார்வை மற்றும் ஆலோசனை : எஸ். பெரியசாமி (பணிப்பாளர்)**

**ஜ.எஸ்.எம். ஹலீம்தீன் (உதவி விவசாயப் பணிப்பாளர்)**